FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.) -
(~~குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~) Under Section 173 BNSS

8120320

1. District : திண்டுக்கல் மாவட்டம் | PS: இ.கா.நி.ந அரசு காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 12/2026 மு.த.அ. எண் | Date: 21/08/2026 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்: U/s 7(a)
(ii) Act சட்டம்: — | Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்: — | Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 12.08.2026
Time Period :- நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 18.08.2026 at 10.30 hrs 13.14.hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : நேரம் 20.08.2026 at 17.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம் 21.08.2026 at 08.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 35 கிமீ தென்மேற்கு திசையில் சீலவாய்த்து கிராம நிர்வாக அலுவலகம்
Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி —
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : திரு. பரமேஸ்வரன் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ Husband's Name : பாலிசாமி தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 35/2026 | (d) Nationality : நாட்டினம் இந்தியர் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் தனியார் பணி | (g) Address : முகவரி 9/220, 9வது வார்டு, கொம்புகாரன்பட்டி சீலவாய்த்து கிராமம், நிலக்கோட்டை தாலுகா திண்டுக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. சிகோரியார், கிராம உதவியாளர், சீலவாய்த்து கிராம நிர்வாக அலுவலகம், நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
21/08/26

15. Date & Time of despatch to the court: 21/08/2026 11.00hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ப. பழனிச்சாமி
Rank: நிலை காவல் ஆய்வாளர் .....No. எண் .....

இறுதி அறிக்கை மற்றும் கண்காணிப்பு பார்வை

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:12/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 21.08.2026-ம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு நிலையத்தில் இருந்த போது திரு.P.பரமேஸ்வரன் (35), த/பெ பால்சாமி, 9வது வார்டு, க.எண். 9/220, கொம்புக்காரன்பட்டி, கூவனூத்து கிராமம், நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காலை 09.00 மணிக்கு கீழ்க்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர். P.பரமேஸ்வரன் (35), த/பெ பால்சாமி, 9வது வார்டு, க.எண். 9/220, கொம்புக்காரன்பட்டி, முசுவனூத்து கிராமம், நிலக்கோட்டை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். பெறுநர்.காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது அப்பா திரு.பால்சாமி அவர்கள் கடந்த 30 வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார். எனது அம்மா திருமதி.அருவதம் மற்றும் என்னுடன் பிறந்தவர்கள் கொம்புக்காரன்பட்டியில் 9வது வார்டில் சுமார் 2.14 செண்ட் நத்தம் புறம்போக்கு இடத்தில் மண் சுவர் மற்றும் சிமெண்ட் சீட்டினாலான வீட்டினை கட்டி, அதற்கு முசுவனூத்து கிராமத்தில் வீட்டி வரி மற்றும் தண்ணீர் வரி கட்டியும், மேலும் அந்த வீட்டிற்கு மின் இணைப்பு எண். 05-248-014-691 பெற்று பயன்படுத்தி வந்தோம். என்னுடன் உடன் பிறந்தவர்கள் திரு.கர்ணன், திருமதி.லதா, திருமதி.பாப்பாத்தி, திருமதி.சத்யா ஆவார்கள். நான் குஜராத் மாநிலம், சூரத்தில் உள்ள சௌத் இந்தியன் ஹாட் ஷிப்ஸ் என்ற கடையில் கடந்த 10 வருடங்களாக பணிபுரிந்து வருகின்றேன். தற்போது எனது குடும்பத்தினர் முடிவு செய்து, மேற்கண்ட இடத்தில் புதிதாக வீடு கட்டி வருகின்றோம். எனவே வீட்டு வேலைகளை கவனிப்பதற்காக நான் கடந்த 2 மாதத்திற்கு முன்பு குஜராத்திலிருந்து எனது சொந்த ஊருக்கு விடுமுறையில் வந்தேன். வீட்டு வேலை நடப்பதால் நானும் எனது மனைவியும் எனது அக்கா திருமதி.பானு அவர்கள் வீட்டில் தான் குடியிருந்து வருகின்றோம். மேற்கண்ட வீட்டு மனையிடத்திற்கு எங்களது அனுபவத்தினை வைத்து இலவச வீட்டு மனை பட்டா வாங்குவதற்கு முடிவு செய்து, எனது உறவினர் திரு.பெருமாள் அவர்களிடம் கடந்த

12.08.2026ம் தேதி நேரில் சந்தித்து கேட்டேன். அப்போது அவர் முசுவனூத்து கிராம நிர்வாக அலுவலகத்தில் பணிபுரியும் திரு.சவேரியார் அவர்களின் செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது திரு.சவேரியார் அவர்கள் நத்தம் புறம்போக்கு இடத்திற்கு இலவச வீட்டு மனை பட்டா பெறுவதற்கு பணம் ரூ.40,000/-ம் செலவாகும் என தெரிவித்துள்ளார். அதன் பிறகு குறைத்துக் கொள்ளும்படி எனது உறவினர் திரு.பெருமாள் அவர்கள் கேட்க பணம் ரூ.5,000/-ம் குறைத்துக்கொண்டு, ரூ.35,000/-ம் கொடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். மேற்கண்ட விபரத்தினை எனது உறவினர் திரு.பெருமாள் என்னிடம் தெரிவித்தார். நான் லஞ்சத்திற்கு எதிரான மனநிலை கொண்டவன் என்பதால் எனக்கு லஞ்சம் கொடுத்து இலவச வீட்டு மனை பட்டா வாங்க விருப்பமில்லை. இந்நிலையில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையிலிருந்து கொடுக்கப்பட்ட விளம்பரத்தினை பார்த்தேன். அதில் லஞ்சத்திற்கு எதிராக புகார் அளிக்க வாட்ஸ் அப் எண். 9498180936 என்ற எண் கொடுக்கப்பட்டிருந்தது. கடந்த 14.08.2026ம் தேதி அந்த எண்ணிற்கு எனது செல்போன் எண். 9766707036 வாட்ஸ்அப் மூலம் மேற்கண்ட விபரத்தினை புகாராக அனுப்பினேன். அதன் பின்பு திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு துறையினர் எண்ணை அலைபேசியில் தொடர்பு கொண்ட போது, மேற்கண்ட விபரங்களை தெரிவித்தேன். இது சம்மந்தமாக புகார் அளித்தால் பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறினார்கள். அதற்கு நான் நேரடியாக் கிராம உதவியாளர் திரு.சவேரியார் அவர்களிடம் சென்று பேசுகிறேன். லஞ்சம் என்னிடம் கேட்டால் புகார் தெரிவிக்கிறேன் என்று கூறிவிட்டேன். நான் கடந்த 18.08.2026ம் தேதி சுமார் 10.30 மணியளவில் முசுவனூத்து கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த கிராம உதவியாளர் திரு.சவேரியார் அவர்களை சந்தித்து, இலவச வீட்டு மனை பட்டா கேட்டு மனுவினை கொடுத்தேன். அப்போது அவரிடம் எனது உறவினர் திரு.பெருமாள் அவர்களிடம் எனது நத்தம் புறம்போக்கு மனை இடத்திற்கு இலவச பட்டா கொடுக்க ரூ.30,000/-ம் கேட்டுள்ளீர்கள் என தெரிவித்தேன். அப்போது அவர் நான் திரு.பெருமாளிடம் ரூ.35,000/-ம் கேட்டேன், அவர் ரூ.30,000/-ம் என சொன்னாரா என்றார். அதற்கு நான் ரொம்ப கஷ்டப்படுற குடும்பம் எனவும், அதனால்தான் வெளி மாநிலம் சென்று வேலை செய்வதாக தெரிவித்தேன். மேலும் பணத்தினை குறைத்துக்கொள்ளுமாறு கேட்டேன். அதற்கு அவர் தான் கேட்ட பணத்தினை தந்தால்தான், மேற்கண்ட மனையிடத்திற்கு

இலவச வீட்டு மனை பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க முடியும் என கறாறாக தெரிவித்தார். நான் அவரிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், ரூ.20,000/- மட்டுமே தர இயலும், இலவச வீட்டு மனை பட்டா வாங்கி கொடுத்த பிறகு முடிந்ததை தருவதாகவும் தெரிவித்தேன். அதற்கு அவர் சரி கொண்டு வா பார்த்துக்கொள்ளலாம் என தெரிவித்தார். அன்றைய தினம் மதியம் சுமார் 11.45 மணிக்கு அவரது செல்போன் எண். 8778163725லிருந்து எனது செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டார். அப்போது நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்ததால் அதனை எடுக்கவில்லை. மேலும் மதியம் சுமார் 01.14 மணிக்கு எனது அலைபேசியில் தொடர்பு கொண்டு, பணம் தயார் செய்துவிட்டாயா எனக் கேட்டார். அதற்கு நான் பணம் தயார் செய்து விட்டு கூப்பிடுவதாக தெரிவித்தேன். அதன் பின்பு மதியம் சுமார் 01.21 மணிக்கு நான் கிராம உதவியாளர் திரு.சவேரியார் அவர்களை அலைபேசியில் தொடர்பு கொண்டு பணம் தயார் செய்ய முடியவில்லை எனவும், எனது ஓனரிடம் கேட்டுள்ளேன் அவர் அனுப்பியவுடன் தந்துவிடுவதாக தெரிவித்தேன். மேற்கண்ட இலவச வீட்டு மனை பட்டா மாறுதல் சம்மந்தமாக எனது அக்கா திருமதி.பானு அவர்கள், அவருக்கு ஏற்கனவே தெரிந்த கிராம உதவியாளர் திரு.சவேரியார் அவர்களை கடந்த 19.08.2026ம் தேதி அலைபேசியில் தொடர்பு கொண்டு பட்டா மாறுதல் செய்து தருமாறு கேட்ட போது, உங்களுக்கு என்றால் செய்து கொடுத்திருப்பேன். அந்த பையன் மீது நம்பிக்கை இல்லை எனவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில், கிராம உதவியாளர் திரு.சவேரியார் அவர்கள் கடந்த 20.08.2026ம் தேதி சுமார் காலை 9.34 மணிக்கு எனது உறவினரான அக்காவின் அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பட்டா மாறுதல் சம்மந்தமாக பேசினார். மேலும் காலை 9.37 மணிக்கு வேறு அலைபேசி எண். 7904841825லிருந்து எனது அக்காவின் அலைபேசி எண்ணில் மீண்டும் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது எனது அக்கா என்னை பற்றி நல்லவிதமாக கூறியும், இலவச வீட்டு மனை பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க உதவுமாறும் தெரிவித்துள்ளார். அதனால் அவர் என் வீட்டிற்கு வந்து பேசிக்கொள்வதாக தெரிவித்துள்ளார். அதன் பின்பு மாலை சுமார் 5.30 மணிக்கு எனது வீட்டிற்கு கிராம உதவியாளர் திரு.சவேரியார் வந்து என்னுடன் பேசிக்கொண்டிருந்தார். அதன் பின்பு கேட்ட பணம் ரூ.20,000/- கொடுத்தால்தான் பட்டாவிற்கு ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்க முடியும் என்று கூறினார். அதற்கு நான் பணம் தயார் செய்ய முடியவில்லை எனத் தெரிவித்தேன். இருக்கிற பணத்தினை

கொடுக்குமாறு மீண்டும் கேட்டார். அப்போது எனது மனைவியிடம் இருந்து ரூ.5,000/-ம் வாங்கி அவரிடம் கொடுத்துவிட்டு, மீதிப்பணம் ரூ.15,000/-த்தை நாளை தயார் செய்து தருவதாக தெரிவித்தேன். அப்போது அவர் பணம் தயார் செய்து விட்டு, அவரை அலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறும், அவர் சொல்லும் இடத்திற்கு வந்து தருமாறும் தெரிவித்துவிட்டு நாங்கள் வீடு கட்டும் இடத்தையும் பார்த்துவிட்டு சென்றுவிட்டார். மேலும் இது சம்மந்தமாக லஞ்சமாக பணம் கேட்டால் திண்டுக்கல் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளிக்குமாறு அறிவுறுத்தியதாலும், எங்களுக்கு சொந்தமான வீட்டு மனை இடத்திற்கு இலவச வீட்டுமனை பட்டா பெற லஞ்சமாக ரூபாய்.20,000/-ம் கேட்டும், என்னிடம் ரூ.5,000/-ம் பெற்றுக்கொண்டும், மேலும் ரூ.15,000/-ம் லஞ்சமாக கேட்கும் கிராம உதவியாளர் திரு.சவேரியார் அவர்களுக்கு பணத்தை லஞ்சமாக கொடுத்து வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, எனவே என்னிடம் ரூ.5,000/-ம் லஞ்சமாக பெற்றும், மேலும் ரூ.15,000/-ம் லஞ்சமாக கேட்ட கிராம உதவியாளர் திரு.சவேரியார் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இத்துடன் பணம் ரூபாய் 15,000/-ம் கொண்டு வந்துள்ளேன். மேலும் இத்துடன் நான் கடந்த 18.08.2026ம் தேதி முசுவனூத்து கிராம நிர்வாக அலுவலகத்தில் அளித்த மனுவின் நகல், எங்களது வீட்டிற்கான மின் இணைப்பு ரசீது, வீடு மற்றும் தண்ணீர் வரி ரசீது ஆகியவற்றின் நகலை இணைத்துள்ளேன். மேற்படி கிராம உதவியார் திரு.சவேரியார் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (P.பரமேஸ்வரன, 21.08.2026).

Sir, Received the complaint on 21.08.2026 at 08.00hrs and made a Confidential Verification on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, a case in Dindigul V&AC, Cr.No.12/2026, u/s.7(a) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018, was registered today at 09.00 hrs and took up invéstigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 21.08.2026).

Original FIR along with Computer Written complaint of Tr.Parameswaran, S/o. Palsamy, 3rd ward, D.No.9/220, Kombukaranpatti, Kuvanoothu Village, Nilakottai Taluk, Dindigul District and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(P.Palanisamy), 21/08/26
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dindigul